

# மலை ஏறலாம் வாங்க..

ஓ.ஜி.கே.எல் (kelab orang gunung KL ) கிளப் ஓராங் குனோங் கே.எல் எனப்படும் கோலாலம்பூர் மலையேறிகள் மன்றம் 1995-ல் ஆரம்பிக்கப்பட்டது. இதில் 99.5 சதவீதம் மலாய்க்காரர்கள் மட்டுமே அங்கம் வகிக்கின்றனர். இவர்கள் அனைவருமே நிபுணத்துவமிக்க தொழிலில் உள்ளவர்கள். குறிப்பாக காவல் துறை அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள், மிகப்பெரிய நிறுவனங்களின் உயர் அதிகாரிகள்.

இந்த மன்றத்தை உருவாக்கியவரின் நோக்கம், இனபேதமின்றி அனைவரும் இதில் இணைந்து செயல்படவேண்டும். எதிர் நீச்சலான இந்தத்துறையில் ஈடுபட்டு வாழ்க்கைக்குத் தேவையான தன்னம்பிக்கையைப் பெறவேண்டும். இதன் அடிப்படையில் ஒற்றுமையைப் பேணவேண்டும் என்பதாகும்.



இதில் ஆச்சரியமான விஷயம் என்னவென்றால் இந்த மன்றத்தில் அபூர்வமாக ஒரே ஒரு இந்திய ஜோடி அங்கம் வகிக்கிறது.

அவர்கள்தான் திருவாளர் விஜி- சலீன் தம்பதியர். காஜங், எம்.பி.எஃப் வங்கியில் நிர்வாகியாகப் பணிபுரியும் திருமதி சலீன், இதற்குமுன் ஒரு வங்கியில் பணிபுரிந்தபோது அங்கே முதன் முதலாக மலையேறும் வாய்ப்பைப் பெற்றதாகக் கூறுகிறார்.

அதன்பிறகு மலேசிய குற்றவியல் தடுப்பு இயக்கத்தின் உறுப்பினரான தனது கணவர் திரு விஜிக்கும் மலையேறும் அனுபவம் இருந்ததால் அவருடன் இணைந்து இன்றுவரை மலையேறுதலை விடாமல் தொடர்ந்து வருவதாகக் கூறுகிறார்.



"மலை ஏறுவது என்பது சாதாரண விஷயமல்ல.. கடும் பாறைகளும் மரங்களும் வேர்களும் குறுக்கிட காடுகளுக்கிடையில் தத்தித் தவழ்ந்து ஏறிச் சென்று சிகரத்தைத் தொடுவது சாதாரண விஷயமல்ல. குறுக்கே அருவி ஓடும், அதைக் கடப்பதற்கு உயரத்தில் கயிறு கட்டி அதில் தொங்கிச் செல்லவேண்டும். மேலே சிகரத்தில் ஒவ்வொரு மலை முகட்டிலும் ஒரு டன் எடையுள்ள, முக்கோண வடிவிலான பெரூட் எனப்படும் டவர் இருக்கும். இதை ஹெலிகப்டர் மூலமாக கொண்டு சென்று வைத்திருப்பார்கள். இதன் வழிதான் கடல் மட்டத்திலிருந்து எத்தனை கிலோமீட்டர் உயரத்தில் இருக்கிறோம் - எந்த திசையில் இருக்கிறோம் என்பதையும் தெரிந்துகொள்ள முடியும். ஒருவர் மலையின் உச்சிக்குச் சென்றுவந்தார் என்று சொன்னால் "அந்த டவரைப் பார்த்தீர்களா?" என்றுதான் கேட்பார்கள். ஏனென்றால் அதுதான் மலையின் சிகரம். அந்த உயரத்தை அடைவது மாபெரும் சிரமம் என்றாலும் அதில் ஆர்வம் மட்டும் இருந்து விட்டால் மிகவும் சுவாரஸ்யமான அனுபவங்களைப் பெறலாம்." என்கிறார் திரு.விஜி.



சந்திப்பு: கணேஷ்

"தொலைக்காட்சி வழி நேஷனல் ஜொகராப்பியில் மட்டுமே பார்த்த பல அபூர்வ காட்சிகளை நேரில் பார்க்கும் வாய்ப்பு கிட்டும். குறிப்பாக பெரிய பெரிய எறும்புகள், வண்ணத்துப் பூச்சிகள், பூங்காக்கள், அருவிகள், நீர்வீழ்ச்சிகள் என கண்ணைக் கவரும் சிந்தனையைச் சுடரவைக்கும் காட்சிகளை நேரடியாகப் பார்க்கலாம்." என்று திருமதி சலீன் விவரித்தார்.

"இந்த அறிவியல், தவாரவியல் சம்பந்தமான மலையேறும் முயற்சி பள்ளி மாணவர்களுக்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் பயனுள்ள பொழுதுபோக்காக அமையும்." என்று மேலும் தெளிவுபடுத்தினார் திரு விஜி.

"தேவையில்லாத பொழுது போக்குகளில் கவனம் செலுத்தும் பிள்ளைகளை நல்வழிப்படுத்தவும் பயனான வழிகளில் செல்லவும் இந்த மலையேறிகள் மன்றத்துடன் தொடர்புகொண்டால் நாங்கள் அவர்களுக்காக உதவத் தயாராக இருக்கிறோம்" என்கிறார் திருமதி சலீன்.

வாசகர்களே.. இந்த பொன்னான வாய்ப்பைப் பயன்படுத்தி அரசாங்க சார்பற்ற பொறுப்பாளர்களால் வழிநடத்தப் படும் மலையேறிகள் மன்றத்துடன் இணைந்து கொள்ளுங்கள்.. உங்கள் வாழ்க்கை சரியான பாதையில் செல்லும்.

**தொடர்புக்கு: திரு. விஜி 0163100516**
**திருமதி சலீன் 0126613342**
**இணையத் தளம்**
www.kelab orang gunung kl.com.my
**அல்லது** www.apip@inbox.com